2. மருத்துவ ஆய்வுகூடங்களில் அல்லது அவை தொடர்பானதும் அல்லது மருத்துவ சாதனத்தின் பயன்பாட்டைத் தேவைப்படுத்துகின்றதும்,

### சாகச விளையாட்டுக்களுடன் தொடர்புடைய வேலைகள்

1. தீப்பற்றியெரியக்கூடிய பதார்த்தம் அல்லது தீ பயன்படுத்தப்படுதலை உட்படுத்துகின்ற செயற்பாடுகளாகவுள்ளதும்,
2. ஆட்டவட்டரங்கு அல்லது களரியாட்ட அரங்கேற்றங்கள் அல்லது வேறு ஏதேனும் அபாயகரமான அரங்கேற்றங்களை உட்படுத்துகின்றதும்,
3. திரைப்படம், தொலைக்காட்சி நாடகம், அல்லது வேறு ஏதேனும் அச்சிடப்பட்ட , அனுப்பபட்ட அல்லது வெளியிடப்பட்ட விடயம் ஒன்று தொடர்பாக, சுகாதாரம், பாதுகாப்பு அல்லது ஒழுக்கத்திற்கு தீங்கு விளைவிக்க கூடியதும்,

### உணவு தயாரித்தலுடன் தொடர்புடைய வேலைகள்

1. வர்த்தக தாபனங்களில் சமைத்தல் அல்லது வெதுப்புதலை உட்படுத்துகின்றதும்

### பிணவறையுடன் தொடர்புடைய வேலைகள்

1. பிரேத அறை, மலர்ச்சாலை அல்லது மயானமொன்றில் உள்ளதும்,

### ஏனைய வேலைகள்

1. அத்தகைய இளமாளின் சுகாதாரம், அல்லது பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்க கூடியதாகவுள்ளதுமான

ஏதேனும் வகையினதான வேலையில் பதினெட்டு வயதுக்குக் குறைந்த எவரேனும் ஒருவரை தொழிலுக்கு அமர்த்துதலாகாது.

## தண்டனைகள்



- ரூபா 10 000 தண்டம் அல்லது ஓராண்டு சிறைத்தண்டனை அல்லது மேற்படி இரண்டு தண்டனைகளுடன் நீதிமன்றத்தின் தற்றுணிபின் படி பாதிக்கப்பட்ட பிள்ளைக்கு நட்டயீடு.
- 18 வயதுக்கு குறைந்தவர்களை ஆபத்தான வேலைகளில் ஈடுபடுத்தி சட்டத்தின் பிடியில் அகப்பட வேண்டாம்.
- அவ்வாறான சந்தர்பங்கள் காணப்படின் சரியான விபரங்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் சிறந்த இளம் பரம்பரையினரின் எதிர்காலத்திற்கு உதவுவதற்குத் தாங்களும் பொறுப்பாக முடியும்.


பணெ்கள் மற்றும் சிறுவர்கள் மீதான பிரிவு
தொழில் திணைக்களம்
12ம் மாடி "மெஹெவர பியச"
நரஹேன்பிட்டி - கொழும்பு 05

தொலைபேசி இல. – 0112104860–65
தொலைநகல் – 0112369800
மின்னஞ்சல் – wca@labourdept.gov.lk
wca.division@gmail.com


18 வயதுக்கு குறைந்த எவரையும்

# ஆபத்தான

## தொழில் துறைகளில் ஈடுபடுத்துவதை தடை



ஆரோக்கியம் பாதுகாப்பு மற்றும் பண்புகள் என்பவற்றிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் தொழில்கள் ஆபத்தான தொழில்கள்


பணெ்கள் மற்றும் சிறுவர்கள் மீதான பிரிவு
தொழில் திணைக்களம்

1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள், இளைஞர் மற்றும் பிள்ளைகளை தொழிலில் ஈடுபடுத்தல் சட்டம் இச்சட்டத்தின் 2006 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க திருத்தத்தின் படி 20(அ) பந்தியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஒழுங்கு விதியின்படி 18 வயதுக்குக் குறைந்த ஆண், பெண் எவரும் ஆபத்தான வேலைகளிலோ வேலையிலோ ஈடுபடுத்தப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

தொழில் திணைக்களத்தால் தொடர்ச்சியாகச் செய்யப்பட்ட விஞ்ஞான ரீதியான மற்றும் விசேடமான ஆய்வுகள் மூலம் 18 வயதுக்குக் குறைந்தவர்களின் உடல் மற்றும் உள நலன்களுக்கும், பாதுகாப்பிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் 51 தொழில்கள், ஆபத்தான தொழில்கள் என்று கண்டறியப்பட்டுள்ளதுடன் இவை 71 ஆக 2021 ஆண்டு நவம்பர் 28 ஆம் திகதிய 2254/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் அதிகரிக்கப்பட்டுள்ளது.



# ஆபத்தான தொழில்களை அடையாளங் காண்போம்

## வீட்டு வேலை

1. வீட்டு வேலையாளொருவராக,

## இறைச்சி, மீன், உப்பு தொடர்பான வேலைகள்

1. விலங்கறு மனையொன்றை அல்லது இறைச்சியை வெட்டுதல், துப்பரவு செய்தல், நறுக்குதலை உட்படுத்துகின்றதும்,
2. விலங்குகளை பராமரித்தல், அவற்றுக்கு உணவளித்தல் மற்றும் பயிற்சியளித்தலை உட்படுத்துகின்றதும்,
3. இறால் பண்ணைகள் அல்லது இழுது மீன் பண்ணைகள் உட்பட நீரியல் பொருட்களை பண்படுத்தல் சம்பந்தமானதும்,
4. வர்த்தக மீன்பிடி அல்லது ஆழமான நீர்ப்பரப்பு மீன்பிடித் தொழிற்பாடுகளில் உள்ளதும்
5. உப்பு அறுவடை செய்தல், பொதியிடல், ஏற்றுதல் அல்லது இடம்பெயர்த்துதலை உட்படுத்துகின்றதும்,



## பீடைகொல்லிகள், இரசாயனப் பொருட்கள், வெடிமருந்துகள் தொடர்பான வேலைகள்



1. பீடைகொல்லிகள், களைகொல்லிகள் அல்லது பூஞ்சைகொல்லிகள் உட்பட கமநல இரசாயனப் பொருட்களின் உற்பத்தி, களஞ்சியப்படுத்துகை, பொதியிடல், விற்பனை செய்தல், கையாளுதல் அல்லது இடம்பெயர்த்தலை உட்படுத்துகின்றதும்,
2. மீன், இறைச்சி, மரக்கறிகள் அல்லது பழங்கள் உட்பட உணவுப்பொருட்களை பதனிடுவதற்கான இரசாயனப் பொருட்களின் பயன்பாடு மற்றும் பழங்களை கனியவைப்பதற்கான இரசாயனப் பொருட்களின் பயன்பாட்டை உட்படுத்துகின்றதும்,
3. தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்களின் உற்பத்தி, அவற்றைக் கையாளுதல், இடம்பெயர்த்தல் அல்லது அகற்றுதலை உட்படுத்துகின்றதும்,
4. கதிரியக்கப் பொருட்களின் பயன்பாடு அவற்றைக் கையாளுதல், இடம்பெயர்த்தல் அல்லது அகற்றுதலை உட்படுத்துகின்றதும்,
5. ஈயம், நாகம், ஆர்சனிக், பாதரசம், குரோமியம், நிக்கல், வெள்ளி, கட்மியம் அல்லது அத்தகைய எவையேனும் தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்கள் அல்லது பதார்த்தங்களின் உற்பத்தி, அவற்றைக் கையாளுதல், இடம்பெயர்த்தல் அல்லது அகற்றுதலை உட்படுத்துகின்றதும்,
6. வெடிமருந்துகள் அல்லது சுடுபடைக்கலன்களின் உற்பத்தி, அவற்றை இடம்பெயர்த்தல், கையாளுதல், அல்லது விற்பனையைக் கையாளுகின்றதும்.
7. பட்டாசுக்கள் அல்லது வேறு ஏதேனும் வெடிமருந்து உற்பத்தி அல்லது அவற்றின் விற்பனையை உட்படுத்துகின்றதும்,

## மதுபானம், புகையிலை தொடர்பான வேலைகள்

1. மதுசார அல்லது கள் உற்பத்தி, அவற்றை இடம்பெயர்த்தல், கையாளுதல் அல்லது விற்பனை செய்தலை உட்படுத்துகின்றதும்,
2. புகையிலை பயிரிடல், அவற்றை அறுவடை செய்தல், பொதியிடல் கையாளுதல் அல்லது இடம்பெயர்த்தல் என்பவற்றை உட்படுத்துகின்றதும்,
3. புகையிலை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி அவற்றை இடம்பெயர்த்தல், கையாளுதல் அல்லது விற்பனை செய்தலை உட்படுத்துகின்றதும்,
4. களரி ஒன்றில், மதுபானசாலையொன்றில் அல்லது சீட்டாட்ட நிலையமொன்றில் அல்லது அது தொடர்பானதும்,

5. ஏதேனும் ஹோட்டலில் உணவகத்தில், சாப்பாட்டுக் கடையில் அல்லது மதுபானச் சாலையில் மதுசாரம் பரிமாறுவதை உட்படுத்துகின்றதும்,

## இறப்பர், தோல் பதனிடுதல் தொடர்பான வேலைகள்

1. தோல் பதனிடுதலுடன் சம்பந்தப்பட்டதும்,
2. இறப்பர் பால் இரசாயனப் பரிகரிப்பின் மூலம் இறப்பர் விரிப்புகளின் உற்பத்தியை உட்படுத்துகின்றதும்,

## இயந்திரங்கள், துறைமுகம் தொடர்பான வேலைகள்

1. தொழிற்பாட்டில் உள்ள இயந்திரத்தொகுதி மற்றும் கூரிய முனைகளுடனான இயந்திரத் தொகுதியின் பயன்பாடு, அவற்றை துப்பரவு செய்தல், தொழிற்படுத்தல், அல்லது பழுதுபார்த்தலை உட்படுத்துகின்றதும்
2. அரைக்கும் ஆலையொன்றில் அல்லது அது தொடர்பானதும்
3. துறைமுகமொன்று, கப்பற்றுறை, புகுவழி, முற்றம், இறங்கு மேடை அல்லது கழிமுகத்தினுள் பாரத்தை ஏற்றிச்செல்லுதலையும், உடலூறை விளைவிக்கின்ற ஏதேனும் சாதனத்தை பயன்படுத்தலை உட்படுத்துகின்றதும்,
4. தொழிற்படுகின்ற படகுகளை உட்படுத்துகின்றதும்,
5. கருவிகளைப் பயன்படுத்தல்இ ஏதேனும் மரத்தினாலான பொருள் அல்லது தளபாடத்தை மெருகூட்டுதல் அல்லது அவற்றுக்கு மர பேணிக்காப்பான்களைத் தெளித்தலை உட்படுத்துகின்ற தச்சுத்தொழிலாகவுள்ளதும்,
6. கனரக வாகனங்களின் டயர்களை மாற்றுவதை உட்படுத்துகின்றதும்,

## சுரங்கம்/ கல்லுடைத்தல்/ மணல், ஓடு, செங்கல்/ சுண்ணாம்பு தொடர்பான வேலைகள்

1. சுண்ணாம்பு, சிலிகேட், கல்நார் அல்லது சீமெந்து உற்பத்தி அல்லது அவற்றைக் கையாளுதலை உட்படுத்துகின்றதும்,
2. நிலத்தின் கீழ் அல்லது குகைகளில் பொறுப்பேற்கப்பட்டதும்,
3. கல் அகழ்தல், கல்லுடைக்கும், இயந்திரம் ஒன்றிற்கு அல்லது அதிலிருந்து கற்களை கொண்டுசெல்லல் அல்லது கல் உடைத்தல், மற்றும் கல் நொறுக்குதலில் உள்ளதும்,
4. துறைமுகமொன்றில் அல்லது அதனைச் சுற்றி மணல் அகழ்வதனை உட்படுத்துகின்றதும்,
5. வாகனமொன்றிற்கு அல்லது கலத்திற்கு அல்லது அதிலிருந்து மணல் ஏற்றுவதனை அல்லது தரையிறக்குவதனை உட்படுத்துகின்றதும்,
6. சுண்ணாம்புக்கல் சூளையொன்றில் உள்ளதும்,
7. சுரங்கம் ஒன்றில் அல்லது கற்சுரங்கமொன்றில் உள்ளதும்,
8. செங்கற்கள் அல்லது கூரை ஓடு உற்பத்திக்கான சூளையொன்றில் உள்ளதும்,

## கட்டிட நிர்மாணம் / கட்டிட வேலைத்தலம்

1. நிர்மாண அமைவிடத்தின் அலுவலக வளவுகளினுள் இலகுவான அலுவலகப் பணி தவிர்ந்த நிர்மாண அமைவிடங்களில் உள்ளதும், அல்லது அவை தொடர்பானதும்,
2. (அ) 1.5 மீற்றருக்கு மேற்பட்ட உயரம் கொண்டதும் (ஒவ்வொரு பக்கத்திலும்) காப்பு வழிமுறைகள் ஏற்பாடு செய்யப்படாததும் அல்லது

   (ஆ) காப்பு வழிமுறைகள் ஏற்பாடு செய்யபட்டிருந்தும் 3.0 மீற்றருக்கு மேற்பட்ட உயரம் கொண்டதுமான (ஒவ்வொரு பக்கத்திலும்),

   ஏதேனும் அமைவிடத்தில் உள்ளதும்,
3. (அ) ஆண்களின் விடயத்தில் எடையில் 8 கிலோகிராமிற்கு மேற்பட்டதும் பெண்களின் விடயத்தில் எடையில் 05 கிலோகிராமிற்கு மேற்பட்டதுமான ஏதேனும் சுமையை 50 மீற்றர்களை விஞ்சிய தூரத்திற்கும் ஆகக்குறைந்தது 03 நிமிட இடைவேளை ஒன்றில்லாமல் 10 நிமிட காலப்பகுதியை விஞ்சுகின்ற தொடர்ச்சியான காலப்பகுதிகளுக்கும், நாளொன்றில் 04 மணித்தியாலங்களை விஞ்சுகின்ற கூட்டுமொத்த காலப் பகுதியொன்றிற்கும் (இடைவேளைகள் உட்பட) உயர்துதலை, கொண்டு செல்லுதலை அல்லது நகர்த்துதலை உட்படுத்துகின்றதும் அல்லது

   (ஆ) ஆண்களின் விடயத்தில் எடையில் 8 கிலோகிராமிற்கு மேற்பட்டதும் பெண்களின் விடயத்தில் எடையில் 05 கிலோகிராமிற்கு மேற்பட்டதுமான ஏதேனும் சுமையை ஆகக்குறைந்தது 03 நிமிட இடைவேளை ஒன்றில்லாமல் 10 நிமிட காலப்பகுதியை விஞ்சுகின்ற தொடர்ச்சியான காலப்பகுதிகளுக்கும் நாளொன்றில் 02 மணித்தியாலங்களை விஞ்சுகின்ற கூட்டுமொத்த காலப்பகுதியொன்றிற்கும் (இடைவேளைகள் உட்பட) வாகனமொன்றுக்கு ஏற்றுதலை அல்லது வாகனத்திலிருந்து தரையிறக்குதலை உட்படுத்துகின்றதும்



   ஆயின் ஆண்களின் விடயத்தில் சுமையானது எடையில் 10 கிலோகிராம்களை விஞ்சுதலாகாது என்பதுடன் பெண்களின் விடயத்தில் சுமையானது எடையில் 07 கிலோகிராம்களை விஞ்சுதலுமாகாது.
4. கட்டிடங்களுக்கு தீந்தை அடித்தலை உட்படுத்துகின்றதும்,
5. வீதி நிர்மாணம் அல்லது காணி மீட்டெடுப்பு நோக்கத்திக்காக மட்டமாக்குதலைஇ சரிவாக்குதலை அல்லது தரையிறக்குதலை உட்படுத்துகின்றதும்

## உருக்கு, கண்ணாடி, கனியங்கள், பித்தளை தொடர்பான வேலைகள்

1. உலோகங்களை உருக்குதலை உட்படுத்துகின்றதும்,
2. கண்ணாடி உற்பத்திக்காக மணலை அரித்தெடுத்தலை உட்படுத்துகின்றதும்,
3. கண்ணாடியை உருக்குதல் அல்லது வெட்டுதலை உட்படுத்துகின்றதும்,
4. பித்தளைப் பொருட்கள் அல்லது வார்ப்பு சிலிக்கனின் உற்பத்தியை உட்படுத்துகின்றதும்,
5. வார்ப்புக் கூடமொன்றில் அல்லது உலோகம் சாணை தீட்டும் இடமொன்றில் உள்ளதும்,
6. கண்ணாடியை அல்லது கண்ணாடிப் பொருட்களை பொதியிடல், அவற்றைக் கையாளுதல், ஏற்றுதல் அல்லது தரையிறக்குதலை உட்படுத்துகின்றதும்
7. ஓடு வெட்டுதலை உட்படுத்துகின்றதும்,

## போக்குவரத்து / சுற்றுலாவுடன் தொடர்பான வேலைகள்

1. பயணிகளை இடம்பெயர்த்துதலை உட்படுத்துகின்றதும்,
2. வழிக்காட்டிகளாக உல்லாசப் பயணிகளுடன் உடன்செல்வதை உட்படுத்துகின்றதும்,

## மரமேறுதலும் வெட்டுதலும் / மரத்தைத் துண்டாக்குதலும் விறகு சேகரித்தலும்

1. காடொன்றில் அல்லது ஏதேனும் வேறு வேலைத்தளத்தில் மரத்தைச் சேகரித்தலை, வெட்டுதலை தறித்தலை அல்லது பிளத்தலை உட்படுத்துகின்றதும்,
2. மரங்கள் ஏறுதல் அல்லது மரங்களை வெட்டி வீழ்த்துதலை உட்படுத்துகின்றதும்,

## ஆயுதமேந்துதலி / பாதுகாப்பு வழங்குதலுடன் தொடர்பான வேலைகள்

1. ஆட்கள், ஆதனம் அல்லது விலங்குகளுக்கான பாதுகாப்பு வழங்குவதனை உட்படுத்துகின்றதும்,

## குப்பைகள், கழிவுகளுடன் தொடர்பான வேலைகள்

1. குப்பைகூளங்கள் அல்லது கழிவுப்பொருள்களின் சேகரிப்பை, அகற்றுதலை அல்லது பெருக்குதலை அல்லது கால்வாய்களை அல்லது வடிகால்களை துப்பரவு செய்தலை உட்படுத்துகின்றதும்,
2. மருத்துவ அல்லது உயிரியல் கழிவு தொடர்பானதும்



## துணி / ஆடை உற்பத்தியுடன் தொடர்பான வேலைகள்

1. புடைவை உற்பத்தியில் பின்வரும் தொழிற்பாடுகளை உட்படுத்துகின்றதும்,
   - அ. புரிநூல் தயாரித்தல்
   - ஆ சிக்கெடுத்தல்
   - இ. நூல் நூற்றல்
   - ஈ. நெய்தல்
   - உ. மெழுகு உருக்குதல்
   - ஊ. சாயம் கலத்தல்
   - எ. வார்ப்புகளில் இடுதல்: அத்துடன்
   - ஏ. நீர் பிரித்தெடுக்கும் இயந்திரங்களில் வேலை செய்தல்
2. தைத்த ஆடைகளின் உற்பத்தி தொடர்பான பின்வரும் எவையேனும் செயற்பாடுகளை உட்படுத்துகின்றதும்:-
   - (அ) அடுக்குதல்
   - (ஆ) நேர்க் கூர் விளிம்பு அல்லது பட்டிக்கூர் விளிம்பு வெட்டுதல்இ அத்துடன்
   - (இ) மெருகிடுதல், அழுத்துதல் மற்றும் இஸ்திரியிடல்

## நீருடன் தொடர்பான வேலைகள்

1. நீச்சல் தடாகங்களில் அல்லது அவற்றின் பேணுகையுடன் தொடர்பானதும்
2. சுழியோடுதலை உட்படுத்துகின்றதும்,
3. ஈர நிலங்களினூடாக நடந்து செல்லல் அல்லது அவற்றில் பூக்கள் பறித்தலை உட்படுத்துகின்றதும்,
4. ஏரி, குளம், ஓடை, ஆறு, நீர்த்தேக்கம், கப்பற்றுறை மேடை, கால்வாய் அல்லது, கடற்கரையொன்றில் அல்லது அது தொடர்பானதும்,
5. உள்நாட்டு அல்லது கடலோர நீர்ப்பரப்புகளில் தொழிற்படுகின்ற கலன் ஒன்றின்மீது உள்ளதும்,



## மின்சாரத்துடன் தொடர்பான வேலைகள்

1. உயர் மின்னழுத்த மின்சார வயர் சம்பந்தப்பட்டதும்,

## அழகுக்கலை / உருவுதல் தொடர்பான வேலைகள்

1. அழகு நிலையங்களில் இரசாயனப் பொருட்கள் அல்லது ஒப்பனைச் சாதனங்களின் பயன்பாட்டை உட்படுத்துகின்றதும்,
2. ஆரோக்கிய உருவல் சிகிச்சை நிலையம் (ஸ்பா) ஒன்றில் உள்ளதும்

## மருத்துவம் / இலத்திரனியல் தொடர்பான வேலைகள்

1. உளவியல்சார் நலன் அல்லது தொடரிணை இயக்கத்துக்கு தீங்கு விளைவிப்பதாகவுள்ள கணணி அல்லது இலத்திரனியல் சாதனங்கள் தொடர்பானதும்.